# இத்தாலி பிரதமருடன் பிரதமர் மோடியின் சந்திப்பு

செப்டம்பர் 09, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, இத்தாலிய குடியரசின் பிரதமர் திருமதி ஜியோர்ஜியா மெலோனியுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார். மார்ச் 2023 இல் மேற்கொண்ட அரசுமுறை பயணத்தை தொடர்ந்து, புது தில்லியில் நடக்கும் ஜி20 மாநாட்டிற்காக இரண்டாவது முறையாக இந்தியா வந்துள்ளார். இதன் போது இருதரப்பு உறவுகள் ஒரு மூலோபாய கூட்டாண்மை நிலைக்கு உயர்த்தப்பட்டன.

இந்தியாவின் ஜி20 தலைமைக்கும், உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி மற்றும் இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தில் இத்தாலி இணைவதற்கும் ஆதரவு தெரிவித்ததாக இத்தாலியை பிரதமர் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகளை ஏற்படுத்தி 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை இரு தலைவர்களும் திருப்தியுடன் குறிப்பிட்டனர். இந்தியா-இத்தாலி வியூகக் கூட்டாண்மையின் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் குறித்தும் அவர்கள் ஆய்வு செய்தனர். மேலும் பாதுகாப்பு மற்றும் புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ஒப்புக்கொண்டனர். ஜி7 மற்றும் ஜி20 ஆகியவை உலகளாவிய நன்மைக்காக ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் குறிப்பிட்டனர்.

ஜி20 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்கு பிரதமர் மெலோனி பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 09, 2023**